
டெக்சாஸ் முருகன் கோவில்
முனைவர் கோ.ப.
இணையவழிப்
பண்ணிசை
வகுப்பு

திருப்புகழ்

**1 கைத்தல நிறைகனி (வயலூர்)**

**பண்:** நட்டபாடை **ராகம்:** கம்பீர நாட்டை

**பண் முறை சந்தம்:** **தாளம்:** ஆதி (8 அட்சரம்)

தத்தன தனதன தத்தன தனதன
    தத்தன தனதன ...... தனதான

வெற்றிவேல் முருகனுக்கு அரோகரா

https://www.kaumaram.com/thiru/nnt0001_u.html

கைத்தல நிறைகனி யப்பமொ டவல்பொரி
    கப்பிய கரிமுக ...... னடிபேணிக்

கற்றிடு மடியவர் புத்தியி லுறைபவ
    கற்பக மெனவினை ...... கடிதேகும்

மத்தமு மதியமும் வைத்திடு மரன்மகன்
    மற்பொரு திரள்புய ...... மதயானை

மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
    மட்டவிழ் மலர்கொடு ...... பணிவேனே

முத்தமி ழடைவினை முற்படு கிரிதனில்
    முற்பட எழுதிய ...... முதல்வோனே

முப்புர மெரிசெய்த அச்சிவ னுறைரதம்
    அச்சது பொடிசெய்த ...... அதிதீரா

அத்துய ரதுகொடு சுப்பிர மணிபடும்
    அப்புன மதனிடை ...... இபமாகி

அக்குற மகளுட னச்சிறு முருகனை
    அக்கண மணமருள் ...... பெருமாளே.

## 6 முத்தைத்தரு (திருவருணை)

**பண்:** நட்டபாடை

**ராகம்:** சண்முகப்பிரியா

**பண் முறை சந்தம்:**

**தாளம்:** ஆதி (8 அட்சரம்)

தத்தத்தன தத்தத் தனதன
தத்தத்தன தத்தத் தனதன
தத்தத்தன தத்தத் தனதன ...... தனதான

வெற்றிவேல் முருகனுக்கு அரோகரா

https://www.kaumaram.com/thiru/nnt0006_u.html

முத்தைத்தரு பத்தித் திருநகை
அத்திக்கிறை சத்திச் சரவண
முத்திக்கொரு வித்துக் குருபர ...... எனவோதும்

முக்கட்பர மற்குச் சுருதியின்
முற்பட்டது கற்பித் திருவரும்
முப்பத்துமு வர்க்கத் தமரரும் ...... அடிபேணப்

பத்துத்தலை தத்தக் கணைதொடு
ஒற்றைக்கிரி மத்தைப் பொருதொரு
பட்டப்பகல் வட்டத் திகிரியில் ...... இரவாகப்

பத்தற்கிர தத்தைக் கடவிய
பச்சைப்புயல் மெச்சத் தகுபொருள்
பட்சத்தொடு ரட்சித் தருள்வதும் ...... ஒருநாளே

தித்தித்தெய ஒத்தப் பரிபுர
நிர்த்தப்பதம் வைத்துப் பயிரவி
திக்கொட்கந டிக்கக் கழுகொடு ...... கழுதாடத்

திக்குப்பரி அட்டப் பயிரவர்
தொக்குத்தொகு தொக்குத் தொகுதொகு
சித்ரப்பவு ரிக்குத் த்ரிகடக ...... எனவோதக்

கொத்துப்பறை கொட்டக் களமிசை
குக்குக்குகு குக்குக் குகுகுகு
குத்திப்புதை புக்குப் பிடியென ...... முதுகூகை

கொட்புற்றெழ நட்பற் றவுணரை
வெட்டிப்பலி யிட்டுக் குலகிரி
குத்துப்பட ஒத்துப் பொரவல ...... பெருமாளே.

## 13 சந்ததம் பந்த (திருப்பரங்குன்றம்)

**பண்:** N/A

**ராகம்:** தேஷ்

**பண் முறை சந்தம்:**

**தாளம்:** ஆதி (8 அட்சரம்)

தந்தனந் தந்தத் ...... தனதான
தந்தனந் தந்தத் ...... தனதான

வெற்றிவேல் முருகனுக்கு அரோகரா

https://www.kaumaram.com/thiru/nnt0013_u.html

சந்ததம் பந்தத் ...... தொடராலே
சஞ்சலந் துஞ்சித் ...... திரியாதே

கந்தனென் றென்றுற் ...... றுனைநாளும்
கண்டுகொண் டன்புற் ...... றிடுவேனோ

தந்தியின் கொம்பைப் ...... புணர்வோனே
சங்கரன் பங்கிற் ...... சிவைபாலா

செந்திலங் கண்டிக் ...... கதிர்காமா
தென்பரங் குன்றிற் ...... பெருமாளே.

## 170 நாத விந்து (பழநி)

**பண்:** N/A **ராகம்:** செஞ்சுருட்டி

**பண் முறை சந்தம்:** **தாளம்:** ஆதி (8 அட்சரம்)

தான தந்தன தானா தனாதன
தான தந்தன தானா தனாதன
தான தந்தன தானா தனாதன ...... தனதான

வெற்றிவேல் முருகனுக்கு அரோகரா

https://www.kaumaram.com/thiru/nnt0170_u.html

நாத விந்துக லாதீ நமோநம
வேத மந்த்ரசொ ரூபா நமோநம
ஞான பண்டித ஸாமீ நமோநம ...... வெகுகோடி

நாம சம்புகு மாரா நமோநம
போக அந்தரி பாலா நமோநம
நாக பந்தம யூரா நமோநம ...... பரசூரர்

சேத தண்டவி நோதா நமோநம
கீத கிண்கிணி பாதா நமோநம
தீர சம்ப்ரம வீரா நமோநம ...... கிரிராஜ

தீப மங்கள ஜோதீ நமோநம
தூய அம்பல லீலா நமோநம
தேவ குஞ்சரி பாகா நமோநம ...... அருள்தாராய்

ஈத லும்பல கோலா லபூஜையும்
ஓத லுங்குண ஆசா ரநீதியும்
ஈர முங்குரு சீர்பா தசேவையு ...... மறவாத

ஏழ்த லம்புகழ் காவே ரியால்விளை
சோழ மண்டல மீதே மநோகர
ராஜ கெம்பிர நாடா ளுநாயக ...... வயலூரா

ஆத ரம்பயி லாரூ ரர்தோழமை
சேர்தல் கொண்டவ ரோடே முனாளினில்
ஆடல் வெம்பரி மீதே றிமாகயி ...... லையிலேகி

ஆதி யந்தவு லாவா சுபாடிய
சேரர் கொங்குவை காவூர் நனாடதில்
ஆவி னன்குடி வாழ்வா னதேவர்கள் ...... பெருமாளே.

**212 காமியத் தழுந்தி (சுவாமிமலை)**

**பண்: N/A** **ராகம்: செஞ்சுருட்டி**

**பண் முறை சந்தம்:** **தாளம்: ஆதி (8 அட்சரம்)**

தானனத் தனந்த ...... தனதான
தானனத் தனந்த ...... தனதான

வெற்றிவேல் முருகனுக்கு அரோகரா

https://www.kaumaram.com/thiru/nnt0212_u.html

காமியத் தழுந்தி ...... யிளையாதே
காலர்கைப் படிந்து ...... மடியாதே

ஓமெழுத் திலன்பு ...... மிகவூறி
ஓவியத் திலந்த ...... மருள்வாயே

தூமமெய்க் கணிந்த ...... சுகலீலா
சூரனைக் கடிந்த ...... கதிர்வேலா

ஏமவெற் புயர்ந்த ...... மயில்வீரா
ஏரகத் தமர்ந்த ...... பெருமாளே.

## 228 பாதி மதிநதி  (சுவாமிமலை)

**பண்:** N/A **ராகம்:** காவடிச் சிந்து

**பண் முறை சந்தம்:** **தாளம்:** இரட்டைகலை ஆதி (8 அட்சரம்)

தான தனதன தான தனதன
  தான தனதன ...... தனதான

வெற்றிவேல் முருகனுக்கு அரோகரா

https://www.kaumaram.com/thiru/nnt0228_u.html

பாதி மதிநதி போது மணிசடை
  நாத ரருளிய ...... குமரேசா

பாகு கனிமொழி மாது குறமகள்
  பாதம் வருடிய ...... மணவாளா

காது மொருவிழி காக முறஅருள்
  மாய னரிதிரு ...... மருகோனே

கால னெனையணு காம லுனதிரு
  காலில் வழிபட ...... அருள்வாயே

ஆதி யயனொடு தேவர் சுரருல
  காளும் வகையுறு ...... சிறைமீளா

ஆடு மயிலினி லேறி யமரர்கள்
  சூழ வரவரு ...... மிளையோனே

சூத மிகவளர் சோலை மருவுசு
  வாமி மலைதனி ...... லுறைவோனே

சூர னுடலற வாரி சுவறிட
  வேலை விடவல ...... பெருமாளே.

## 883 அஞ்சன வேல்விழி மடமாதர் (தஞ்சை)

**பண்:** N/A **ராகம்:** காவடிச் சிந்து

**பண் முறை சந்தம்:** **தாளம்:** தா தகிட (கண்டநடை - இரு இரு முறை தட்டுதல்)

தந்தன தானன ...... தனதான

வெற்றிவேல் முருகனுக்கு அரோகரா

https://www.kaumaram.com/thiru/nnt0883_u.html

அஞ்சன வேல்விழி ...... மடமாதர்
அங்கவர் மாயையி ...... லலைவேனோ
விஞ்சுறு மாவுன ...... தடிசேர
விம்பம தாயரு ...... ளருளாதோ
நஞ்சமு தாவுணு ...... மரனார்தம்
நல்கும ராவுமை ...... யருள்பாலா
தஞ்சென வாமடி ...... யவர்வாழத்
தஞ்சையில் மேவிய ...... பெருமாளே.

## 1328 ஏறுமயிலேறி  (திருவருணை)

**பண்:** N/A **ராகம்:** மோகனம்

**பண் முறை சந்தம்:** **தாளம்:** ஆதி (8 அட்சரம்)

தந்தன தானன ...... தனதான

வெற்றிவேல் முருகனுக்கு அரோகரா

https://www.kaumaram.com/thiru/nnt1328_u.html

மங்களம் - 'ஏறுமயில் ஏறி'

ஏறுமயி லேறிவிளை யாடுமுக மொன்றே
ஈசருடன் ஞானமொழி பேசுமுக மொன்றே

கூறுமடி யார்கள்வினை தீர்க்குமுக மொன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுக மொன்றே

மாறுபடு சூரரை வதைத்தமுக மொன்றே
வள்ளியை மணம்புணர வந்தமுக மொன்றே

ஆறுமுக மானபொருள் நீயருளல் வேண்டும்
ஆதியரு ணாசல மமர்ந்த பெருமாளே.